<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 448/2014**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 30.06.2023 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023 ஆண்டு ஜீன் 30 ம் நாள் சாட்சியம்.

---

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 02.05.2011 ம் தேதி நானும், என் மகனுக்காக பாதுகாவலராக புல எண்.299/2 ல் 2 ஏக்கர் 10 செண்ட் பூமியினை ஆத்துக்கால் புதுாரை சேர்ந்த காளிதாள் மகன் கார்த்திகேயன் என்பவருக்கு ஆவண எண்.5047/2011 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலை பார்த்துவிட்டு ஆமாம் என்று கூறுகிறார், அந்த ஆவணத்தின் சார் பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பழைய க.ச.336 ல் மொத்த விஸ்தீரணம் 12 ஏக்கர் 95 செண்ட் என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியாது.

2. வழக்குரையில் 4 வது பத்தியில் சித்திராவுத்தன்பாளையம் க.ச.336 ல் மொத்தம் பு.ஏ.12.95 விஸ்தீரண பூமியில் பொதுவில் 1/3 பாகம் பு.ஏ.4.31 2/3 விஸ்தீரண பூமியினை எனது தகப்பனார் நாச்சிமுத்து கவுண்டர் கடந்த 27.06.1955 தேதியிட்ட கிரையப்படி தனித்து பாத்தியப்பட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். உண்மையில்

கிரையம் பெற்றது 5 ஏக்கர் ஆகும். வழக்கு பிரதிவாதிகளை 1955-ல் இருந்து நான் பார்க்கவில்லை. இதுவரை யாரென்றே இருவரையும் தெரியாது. எனது மற்றொரு பாகதஸ்தர் ஆன சின்ன நாச்சம்மாளை தெரியும், எனது பங்கிற்கு நேர் மேல்புறமாக அவரது பங்கு 1/3 உள்ளது.

3. எனது வழக்குரையில் 6, 7 பத்திகளில் ரீசர்வே எண்.299/2 ல் 2 ஏக்கர் மட்டுமே விற்றதாக வழக்குரையில் சொல்லியுள்ளது தவறுதான் என்றால் சரிதான். எனக்கு கார்த்திகேயன் என்பவருக்கு விற்றது போக 2.21 2/3 விஸ்தீரணம் தான் இருக்கும் என்றால் சரி. எனது பூமிக்கு மேல்புறமாக 20 செண்ட் பூமி உள்ளது என்றால் இல்லை. சின்னத்தாயிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே இவ்வழக்கில் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தவறு. ரீசர்வே எண்.299/3 ல் யார் உள்ளது, அதில் வீடு உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவாச் சொத்தினை சர்வேயருடன் வந்து அளந்த போது நான் பார்க்கவில்லை என்றால் ஆமாம். ரீசர்வே.எண்.298/3 லும், 298/4 லும் எனக்கு எந்த பாகமும் இல்லையென்றால் ஆமாம்.

**(வழக்கறிஞர் வேண்டுதலின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

**Sd/- Ms.Mathivathani Vanangamudi**,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.